**அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை**
*Ang Mo Kio Tamil Methodist Church*

**22nd டிசம்பர் / December 2024 ஞாயிறு ஆராதனை**

✝ **ஆராதனைக்கு அழைப்பு** — **திருமதி. கோஹிலா**
Call to Worship — Mrs. Kohila

**இறைவணக்கப்பாடல்** — **பாடகர் குழு**
Introit — Choir

**ஜெபம்** — **திருமதி. கோஹிலா**
Prayer — Mrs. Kohila

## நான்காம் ஞாயிறு: *Lighting of Advent 4th Candle*
## அன்பு
## *LOVE*

***லூக்கா 1:35***

***35. பரிசுத்த ஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்.***

***மூன்று ஊதா மற்றும் ஒரு இளஞ்சிவப்பு நிற மெழுகுவர்த்தியை கொழுத்தவும்***
***(Light up three purple candles and one pink candle):*** — **மறைதிரு. ஜெப குமார்**
Rev. Jeba Kumar

***அந்நேரத்தில் சொல்ல வேண்டியது:*** — **திருமதி. கோஹிலா**
Mrs. Kohila

***நம்பிக்கை, சமாதானம், மற்றும் மகிழ்ச்சியை குறிக்கும் மூன்று மெழுகுவர்த்திகளோடு அன்பை குறிக்கம் மெழுகுவர்த்தியை இன்று கொழுத்துகிறோம். ஆண்டவர் நம்மீது பாராட்டின மற்றும் பாராட்டுகிற அன்பை நம் என்றும் நினைவுக்கூறுவோம்.***

***ஜெபம்:*** ***அன்பின் இலக்கணமான எங்கள் பரம பிதாவே. தகுதியற்ற எங்கள் மீதும் உம்முடைய அன்பை பாராட்டி உம்முடைய குமாரனின் வருகையினால் உம்முடைய அன்பை வெளிப்படுத்தினீரே, உமக்கு நன்றி செலுத்துகிறோம். உம்முடைய அன்பை பெற்ற நாங்கள் பிறர் இடத்திலும் அன்பு காட்ட கிருபை புரியும் என இயேசுவின் இணையற்ற நாமத்தில் ஜெபிக்கிறோம் எங்கள் வல்ல பிதாவே. ஆமேன்***

✝ **தொடக்க பாடல்** — **சபையார் இணைந்து**
Opening Song — Congregation

**பக்தரே, வாரும் ஆசை ஆவலோடும்**

*1. பக்தரே. வாரும்*
*ஆசை ஆவலோடும்;*
*நீர் பாரும் நீர் பாரும்*
*இப்பாலனை;*
*வானோரின் ராஜன்*
*கிறிஸ்து பிறந்தாரே!*

**சாஷ்டாங்கம் செய்ய வாரும்,**
**சாஷ்டாங்கம் செய்ய வாரும்.**
**சாஷ்டாங்கம் செய்ய வாரும்,**
**இயேசுவை**

*2.. தேவாதி தேவா,*
*ஜோதியில் ஜோதி,*
*மானிட தன்மை நீர்*
*வெறுத்திலீர்.*
*தெய்வ குமாரன்,*
*ஒப்பில்லாத மைந்தன்!*

*3. மேலோகத்தாரே,*
*மா கெம்பீரத்தோடு*
*ஜென்ம நற்செய்தி பாடி*
*போற்றுமேன்;*
*'விண்ணில் சந்தோஷம்*
*மண்ணில் சமா தானம்!'*

*4. இயேசுவே, வாழ்க!*
*நீரே ஜென்மித்தீரே,*
*புகழும் ஸ்துதியும்*
*உண்டாகவும்*
*அன்பின் சொரூபி*
*அருள் அவதாரம்.*

✝ **மாறி மாறி வாசித்தல் 51ம் ஞாயிறு** — **சபையார் இணைந்து**
"சங்கீதம் 146" — Congregation

**"என் ஆத்துமாவே, கர்த்தரைத் துதி"**

Psalter Reading – "Psalm 146"

✝ **தந்தை போற்றி** — **சபையார் இணைந்து**
Gloria Patri — Congregation

**துதி ஆராதனை**
Singspiration

**ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்** — **மறைதிரு. ஜெப குமார்**
Thanksgiving & Pastoral Prayer — Rev. Jeba Kumar

**பரமண்டல ஜெபம்** — **சபையார் இணைந்து**
Lord's Prayer — Congregation

✝ ***காணிக்கைப் பாடல்*** — ***சபையார் இணைந்து***
Offertory Song — Congregation

**இவரே பெருமான்**

***இவரே பெருமான், மற்றுப்***
***பேர் அலவே பூமான், - இவரே***
***பெருமான்.***

*1. கவலைக் கிடங்கொடுத் தறியார் - வேறு*
*பலவினை யாதுமே தெரியார் - இப்*
*புவனமீது நமக்குரியார்*

*2. குருடர்களுக் குதவும் விழியாம், - பவக்*
*கரும இருளை நீக்கும் ஒளியாம், - தெய்வம்*
*இருக்குந் தலஞ்செல் வாசல் வழியாம்*

*3. பலபிணி தீர்க்கும் பரிகாரி, - சொல்லும்*
*வலமையில் மிக்க விபகாரி, - எக்*
*குலத்துக்கும் நல்ல உபகாரி.*

*4. அறஞ் செய்வதினில் ஒரு சித்தன், - கொடு*
*மறம்விடு பவர்க்கருள் முத்தன் - இங்கே*
*இறந்தோர்க் குயிரீயும் கர்த்தன்.*

*5. அலகைதனை ஜெயித்த வீரன், - பவ*
*உலகை ரட்சித்த எழிற்பேரன், - விண்*
*ணுலக வாழ் தேவ குமாரன்.*

*6. பொன்னுலகந் தனில்வாழ் யோகன், - அருள்*
*துன்ன உலகில் நன்மைத் தேகன், - நம்பால்*
*தன்னை யளித்த ஓர் தியாகன்.*

✝ ***பூலோகத்தாரே யாவரும்*** — ***சபையார் இணைந்து***
Doxology — Congregation

✝ ***திருமறைப் பாடம்*** — ***திரு. மெல்பின்***
Scripture Reading — Mr. Melbin
***லூக்கா 1 : 39 - 45***
Luke 1 : 39 - 45

***அருளுரை*** — ***மறைதிரு. ஜெப குமார்***
Sermon — Rev. Jeba Kumar

✝ ***அர்ப்பணகீதம்*** — ***சபையார் இணைந்து***
Offertory & Closing Song — Congregation

**ஆர் இவர் ஆராரோ**

***ஆர் இவர் ஆராரோ இந்த அவனியோர் மாதிடமே***
***ஆனடை குடிலிடை மோனமாய் உதித்த இவ்வற்புத பாலகனார்?***

*1. பாருருவாகுமுன்னே இருந்த பரப் பொருள் தானிவரோ?*
*சீருடன் புவி, வான், அவை பொருள் யாவையுஞ் சிருட்டித்த மாவலரோ?*

*2. மேசியா இவர்தானோ? நம்மை மேய்த்திடும் நரர்கோனோ?*
*ஆசையாய் மனிதருக்காய் மரித்திடும் அதி அன்புள்ள மனசானோ?*

*3. தித்திக்குந் தீங்கனியோ? நமது தேவனின் கண்மணியோ?*
*மெத்தவே உலகிருள் நீக்கிடும் அதிசயமேவிய விண்ணொளியோ ?*

*4. பட்டத்துத் துரைமகனோ? நம்மைப் பண்புடன் ஆள்பவனோ?*
*கட்டளை மீறிடும் யாவர்க்கும் மன்னிப்புக் காட்டிடுந் தாயகனோ?*

*5. ஜீவனின் அப்பமோதான்? தாகம் தீர்த்திடும் பானமோதான்?*
*ஆவலாய் ஏழைகள் அடைந்திடும் அடைக்கலமானவர் இவர்தானோ?*

***அறிவிப்புகள்***
Announcements

✝ ***மனப்பாட வசனங்கள்*** — ***சபையார் இணைந்து***
Weekly Memory Verses — Congregation
***லூக்கா 1 : 45***
Luke 1 : 45

***45. விசுவாசித்தவளே பாக்கியவதி, கர்த்தராலே அவளுக்குச் சொல்லப்பட்டவைகள் நிறைவேறும் என்றாள்.***

✝ ***முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்*** — ***மறைதிரு. ஜெப குமார்***
Closing Prayer & Benediction — Rev. Jeba Kumar

✝ ***ஆசீர்வாதப் பாடல்***
Benediction Song

✝ ***சபையார் நிற்கவும்*** ⁄ Indicates Congregation standing